29th August 1970]

(2) *Message from the Assembly*

MR. CHAIRMAN : I have also received a message from the Hon. Speaker, Tamil Nadu Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1970 (L.A. Bill No. 18 of 1970) as passed by the Assembly and signed by him for the concurrence of the Council.

(3) *Nomination of Members to the Business Advisory Committee for the year 1970–71*

MR. CHAIRMAN : I have to announce to the House that, under rule 166 (1) of the Tamil Nadu Legislative Council Rules, I have nominated the following Members to be the Members of the Business Advisory Committee of the Council for the year 1970–71 :

(1) Hon. Chairman (Chairman)
(2) Hon. Thiru M. Karunanidhi, Chief Minister (Leader of the House-Council)
(3) Thiru G. Krishnamoorthy
(4) Thiru K. Rajaram
(5) Thiru G. Parangusam
(6) Thiru Saw. Ganesan
(7) Thiru A. R. Damodaran
(8) Thiru S. Jayarama Reddiar
(9) Thiru T. K. Subbiah.

The Hon. Leader of the House (Assembly) will be a permanent invitee.

III. ADJOURNMENT MOTION

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, முக்கியமான ஒரு விஷயத்தைப்பற்றி நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதன் நிலைமை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மிஸ்டர் சேர்மன் : சம்பந்தப்பட்ட அமைச்சர் அதனுடைய விவரங்களைக் கேட்டு எழுதியிருக்கிறார்கள். திங்கட்கிழமை எடுத்துக் கொள்ளப் படும்.

IV. CALLING ATTENTION TO THE INCONVENIENCE CAUSED TO STUDENTS AND SCHOOLS ON ACCOUNT OF THE PUBLICATION OF NATIONALISED TEXT-BOOKS BY THE TAMIL NADU TEXT-BOOK SOCIETY.

THIRU M. RAJAH IYER : Mr. Chairman, Sir, may I call the attention of the Hon. the Minister for Education and Health to a matter of urgent public importance, namely, the nationalised text-books for schools published by the Tamil Nadu Text Book Society and the consequent inconvenience caused to students and schools ?

<u>மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்</u> : 1956-ஆம் ஆண்டு கல்வித் துறை வெள்ளை அறிக்கையின் மீதான சட்டமன்றக் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிவுரைகளை ஒட்டி, 1957-58-ஆம் ஆண்டிலேயே அரசு பாடப் புத்தகங்களை வெளியிட வேண்டும் என்னும் முடிவு எடுக்கப்பட்டது ; இம்முடிவு சட்டமன்றத்தின் இரு அவைகளாலும் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இக்கொள்கை படிப்படியான கட்டங்களில் நிறைவேற்றப்பட்டது. 1960-61-ஆம் ஆண்டில் 5-ஆம் வகுப்புக்கான ஆங்கிலப் பாடப் புத்தகத்தை வெளியிட்டதன் மூலம் இக்கொள்கை நிறைவேற்றப்படத் தொடங்கியது. கீழே காணும் பாடப் புத்தகங்கள் அரசால் வெளியிடப்பட்டு 'மவுண்ட் சாலை' யில் உள்ள அரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டன. அவை யாவன :—

(1) தமிழ்ப் பாடப் புத்தகங்கள் : 1 முதல் 8 முடிய உள்ள வகுப்புகளுக்கு உரியவை.

(2) ஆங்கிலப் பாடப் புத்தகங்கள் : 4 முதல் 8 முடியவுள்ள வகுப்புகளுக்கு உரியவை.

(பள்ளி இறுதி வகுப்புத் தேர்வுக்குரிய (பதினோராம் வகுப்பு) ஆங்கிலம், தமிழ்ப் பாடப் புத்தகங்கள் இதற்கு முன்னர் பல ஆண்டுகளாகவே தொடர்புடைய பல்கலைக் கழகங்களால் வெளியிடப்பட்டு வந்துள்ளன.)

புழைய அரசுப் பாடப் புத்தகங்களை அச்சிடுதல் தொடர்ந்து அரசு அச்சகத்தில் மேற்கொள்ளப்பட்டது. மொத்தம் அச்சிடப்பட வேண்டிய 61.4 லட்சம் புத்தகங்களில், 22—8—1970 அன்று வரை அரசு அச்சகம் 52.86 லட்சம் பிரதிகளை முடித்துத் தர இயன்றது. இதற்கு முக்கிய காரணம் காகிதப் பற்றுக் குறையேயாகும். பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்குப் போதுமான காகிதத்தைத் தன்னல் ஒதுக்கித் தர இயலாது என்று மத்திய அரசு தெரிவித்து விட்டதால், வெளிச்சந்தையில் காகித உற்பத்தியாளர்களிடமிருந்தே வாங்க வேண்டி வந்தது. இருந்தபோதிலும் இந்தப் புத்தகங்களெல்லாம் முந்திய ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டு வந்த புத்தகங்கள் மறுபதிப்புகளாக இருந்தமையால், இந்தப் புத்தசங்கள் பற்றுக்குறை அவ்வளவாக உணரப்படவில்லை.

1970-71-ல் அரசுப் பாடப் புத்தகங்களை அச்சிட்டு வழங்கும் பணியை மேற்கொள்வதற்காக தமிழ் நாட்டு பாடப் புத்தகக் கழகம் ஒன்றை அமைக்க அரசு முடிவு எடுத்தது. இக்கழகம் 21-3-70 அன்று சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. அரசு கீழ்க்கண்ட பாடப் புத்தகங்களையும் வெளியிட முடிவு செய்தது :—

(1) தமிழ் ஆங்கிலப் பாடப் புத்தகங்கள்— 9, 10-ஆம் வகுப்புகளுக்கு உரியன.

(2) கணிதப் பாட புத்தகங்கள் (தமிழில்)—3 முதல் 10 முடிய உள்ள வகுப்புக்களுக்குரியன.

பாட நூற்கழகம் பதிவு செய்யப்படுவதற்கு முன்னரேயே அவ்வத் துறைகளில் உள்ள வல்லுநர்களைக் கொண்டு பாடநூல்களின் கையெழுத்துப் பிரதிகளைத் தயாரிப்பதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டன. ஆங்கிலம் தவிர, ஏனைய பாடங்களில் ஒவ்வொரு நூலிலும் இரண்டு வகைகள் எடுத்துக்கொள்ளப் பட்டன; ஒரு வகைப் பாடநூல் மதுரைப் பல்கலைக் கழகத்தின் கீழுள்ள மாவட்டங்களுக்கும் பிறிதொரு வகைப் பாட நூல் சென்னை பல்கலைக் கழகத்தின் கீழுள்ள மாவட்டங்களுக்கும் உரியவை ஆகும்.

பாட நூற்கழகத்துக்கு அதன் தொடக்க நிலையில் பல்வேறு இன்னல்களும் இடர்ப்பாடுகளும் ஏற்பட்டன. இடையூறுகளில் ஒன்று அச்சகக் காகிதப் பற்றாக்குறையாகும்; இது இந்தியாவெங்கிலும் பரவலாக உள்ளது. இப்பிரச்னை இந்திய அரசின் நாட்டத்தை ஈர்த்துள்ளது. அவர்கள் இதற்கு இன்னும் ஒரு தீர்வைக் கண்டபாடில்லை. பெரும் இடர்ப்பாட்டுடன், ஈரோட்டிலுள்ள சேஷசாயி பேப்பர் மில் நிறுவனம் காகிதம் வழங்கியது. கல்கத்தாவில் உள்ள 'டிட்டாகர் காகித ஆலையும்' காகிதம் வழங்கும்படி கேட்கப்பட்டது. ஆனால் அங்கு ஆலையில் நடந்த வேலை நிறுத்தத்தாலும், போக்குவரத்து இடையுறுகளாலும் அந்நிறுவனம் ஆணையை உரிய நேரத்தில் நிறைவேற்ற முடியவில்லை. மேலும் பக்கங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் செய்யப்பட்ட முதல் மதிப்பீடு உண்மையில் தேவைப்படுவதைக் காட்டிலும் குறைவே என்பது தெரியவந்தது; ஏனெனில் சில புத்தகங்களில் பக்கங்களின் எண்ணிக்கை அதிகம் என்று தெரிய வந்தது.

ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைத்த பிறகு புதிய அரசுப் பாடப் புத்தகங்களை அச்சிடும் பணி கீழ்க்கண்ட தனியார் அச்சகங்களிடம் ஒப்படைக்கப்பட்டது:—

(1) திருவாளர்கள் மேப்ஸ் அண்டு அட்லாஸஸ், (பி) லிட்., நிறுவனத்தார், சென்னை.

(2) காரனேஷன் லித்தோ ஒர்க்ஸ், சிவகாசி.

(3) ஓரியண்ட் லித்தோ ஒர்க்ஸ், சிவகாசி.

மதுரைப் பல்கலைக் கழகப் பகுதிக்கான புத்தகங்களை அச்சிடும் வேலையைக் கடைசியாகச் சொல்லிய இரு அச்சகங்கள் எடுத்துக்கொண்டன. சென்னைப் பல்கலைக் கழகப் பகுதிக்கு வேண்டிய புத்தகங்களை அச்சிடும் வேலையை முதலில் சொல்லிய அச்சகத்தினர் எடுத்துக் கொண்டனர். அச்சிடவேண்டிய புத்தகங்களின் எண்ணிக்கை "டெமி ஆக்டேவா" அளவானதாக 22 புத்தகங்கள் ஆகும். அச்சிடப்பட வேண்டிய படிகளின் மொத்த எண்ணிக்கை சுமார் 56 லட்சம் ஆகும். அச்சுக் கோப்பிலும், காகிதம் பெறுவதிலும் இடர்ப்பாடு இருந்த போதிலும் சிவகாசி அச்சகங்கள் உரிய காலத்தில் வேண்டிய பிரதிகளை அச்சிட்டுக் கொடுக்க முடிந்தது.

பங்கீட்டு முகவரிகள் மூலமாக மதுரைப் பல்கலைக் கழகப் பகுதி முழுவதும் இப்புத்தகங்கள் வழங்கப்பட்டன. மெஸர்ஸ் மேப்ஸ் அண்டு அட்லாஸஸ் லிமிடெட், வேண்டிய அளவு ஆங்கில, தமிழ்ப் பாடப்

புத்தகங்களை அச்சிட்டுக் கொடுக்க முடிந்தது. அதே சமயத்தில் பல் வேறு வகுப்புகளுக்கு வேண்டிய கணிதப் புத்தகங்களை அவர்கள் அச்சிட்டு உரிய காலத்தில் முடித்துக் கொடுக்க முடியவில்லை. இதற்கு அச்சுக்கோப்பு வேலையில் அவர்கள் அடைந்த இடர்ப்பாடும் அவர்களது இயந்திரம் பழுதடைந்ததும்தான் காரணமாகும். தானியங்கிப் புத்தகக் கட்டு இயந்திர வசதியை இவர்கள் பெற்றிராததால், புத்தகங்களுக்கு அட்டைபோட்டு ''பைண்டு'' செய்வதில் மூன்று அச்சகத்தினருக்கும் நிறைய வேலை கொண்டது.

மெஸர்ஸ் மேப்ஸ் அண்டு அட்லாஸஸ் லிமிடெட் அச்சிட முடியாத புத்தகங்களை அச்சிட்டு முடித்துக் கொடுக்கும் பொருட்டு, இக்கழகம் சில உடனடி ஏற்பாடுகளை எடுத்துக் கொண்டது. இப் புத்தகங்களில் சில, சிவகாசியில் கீழ்க்காணும் மூன்று அச்சகங்களில் அச்சிடப்பட்டன :

(1) சகாதேவன் ஆப்செட் பிரிண்டர்ஸ், சிவகாசி.

(2) நேஷனல் லித்தோ பிரஸ், சிவகாசி.

(3) காரனேஷன் லித்தோ ஓர்க்ஸ், சிவகாசி.

6, 7, 8-ஆம் வகுப்புக்களுக்கான கணிதப் புத்தகங்கள் சென்னை மலைச்சாலையிலுள்ள நேஷனல் அச்சகத்தில் அச்சிடப்பட்டன. காகிதப் பற்றாக்குறை காரணமாக இங்கும் கணிசமான தொல்லை ஏற்பட்டது. சென்னை மவுண்ட் சாலையில் உள்ள நேஷனல் அச்சகத்திற்கு 'ரீல்களில்' தாள் தேவைப்பட்டது. ரீல்களில் தாள் வழங்குமாறு சேஷசாயி காகித ஆலை கேட்டுக் கொள்ளப்பட்டது.

பள்ளிக்கூடங்கள் மீண்டும் திறக்கப்பட்ட பிறகு சுமார் ஒரு வார கால தாமதம் ஏற்பட்டிருந்த போதிலும், ஆங்கிலத்திலும் தமிழிலும் பாடப் புத்தகங்கள் உரிய காலத்தில் ஏறத்தாழ அச்சடிக்கப்பட்டு எல்லாப் பள்ளிகளுக்கும் கொடுக்கப்பட்டிருப்பது மேற்சொல்லியவற்றிலிருந்தே தெரிய வரும். கணிதப் பாடப் புத்தகங்களைப் பொறுத்தவரையில் அச்சடித்துக் கிடைக்கக்கூடிய பிரதிகளையெல்லாம் அனைத்து மாவட்டங்களுக்கும் பிரித்துக் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒவ்வொரு பள்ளிக்கும் குறைந்தது அவர்களுக்குத் தேவையான அளவில் ஒருபகுதியேனும் கொடுக்கப்பட்டுள்ளது.

இப்பணியின் அளவு மிக மகத்தானது. இக் கழகம் தொடக்க நிலையில் எண்ணற்ற இன்னல்களையெல்லாம் எதிர் நோக்கியது. எடுத்துக்காட்டாக, காகிதப் பற்றாக்குறை, அச்சுக் கோர்த்தலில் இடர்ப்பாடு, அவசியமான பணியாளர் தேவை போன்ற இடர்ப்பாடுகளை அது தொடங்கப்பட்ட முதலாண்டிலேயே கண்டது. இத்தகைய எல்லா வகையான இடர்ப்பாடுகள் ஏற்பட்ட போதும் 56 லட்சம் அரசு பாடப் புத்தகப் பிரதிகளில் 44 லட்சம் பிரதிகள் அச்சிடப்பட்டு 22—8—70 அன்றுக்கு முன் வழங்கப்பட்டுவிட்டன.

இப்போது பெற்ற அனுபவத்தைக் கொண்டு, எவ்வகையானும் எவ்விதத் தாமதமுமின்றி அடுத்த ஆண்டுக்கான பாடப் புத்தகங்களை இக்கழகம் தயாரிப்பதில் இடர்ப்பாடு எதுவும் இருக்காது.

இந்த அரசுப் பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்காகத் தனியார் அச்சகங்களை அரசு நம்பியிருக்காத வகையில் கிழக்கு ஜெர்மனியிலிருந்து அவசியமான அச்சு இயந்திரங்கள் தருவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முழு வசதி பெற்ற அச்சு இயந்திரம் நிறுவப்பட்டதும், இத்தகைய பாடப் புத்தகங்கள அச்சிடுவதில் ஏற்படும் பெரும்பாலான இடர்ப்பாடுகள் தவிர்க்கப்படும்.

V. GOVERNMENT BILL

The Tamil Nadu Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1970.
(L. A. Bill No. 18 of 1970)

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை நிறைவேற்றியுள்ள தமிழ் நாடு 1970-ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) திருத்த மசோதா(*) (சட்ட மன்றப் பேரவை மசோதா 18/1970) ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று நான் முன் மொழிகிறேன்.

உறுப்பினர்கள் அறிந்துள்ளவாறு குடியிருப்புக் கட்டிடங்கள் மற்றும் குடியிருப்புக்கு ஆகாத கட்டிடங்களின் வாடகையைக் கட்டுப்படுத்தவும் அக்கட்டிடங்களில் வாடகைக்குக் குடியிருப்பவர்களைக் காரணமின்றி வெளியேற்றுவதைத் தடுப்பதுமே தமிழ் நாடு 1960-ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு சட்டம் 18/1970) சட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இது காரியத்திற்கான சட்டம் இம்மாநிலத்தில் 1941-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து செயலில் உள்ளது. 1960-ஆம் ஆண்டுச் சட்டத்தின் மூலம் முன்பு செயலிலிருந்த சட்டம் திருத்தியமைக்கப்பட்டுத் தொகுக்கப்பட்டது. 1960-ஆம் ஆண்டுச் சட்டம் 30-7-1970 அன்று செயல்திறனற்றுப் போகும். சட்டத்தின் பல்வேறு விதித்துறைகளை ஆய்வு செய்து, தகுந்த திருத்தங்களைத் தெரிவிக்கும்படி, உள்துறை அரசுச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு அதிகாரிகள் பலர் அடங்கிய குழு ஒன்றை அரசு 1969 நவம்பரில் அமைத்துள்ளது. இக்குழு பெரும்பாலும் தனது பணியை முடித்துவிட்டது. தனது அறிக்கையை 15-9-70-க்குள் அரசுக்குப் பணிந்து அனுப்புமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

குழு தனது அறிக்கையை அனுப்பிய பிறகு, அரசு அவ்வறிக்கையைப் பரிசீலனை செய்து தகுந்த சட்டம் ஒன்றை இயற்ற முன்வரும். இயன்ற விரைவில் இது மேற்கொள்ளப்படும். 1960-ஆம் ஆண்டுச் சட்டத்தின் 1-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவுக்கு 30-9-70-க்கு முன்பு ஒரு திருத்தம் கொண்டுவந்து, அச்சட்டத்தின் செல்திறன் கால அளவை நீட்டித்தாலன்றி, அச்சட்டம் மேற்குறிப்பிட்ட நாளன்று செல்திறனற்றுப்போகும்.

(*) Printed as Appendix III.